# "ஆழ்வார்களின் பக்தி நெறி"
## THE DEVOTIONAL PRACTICE OF THE ALWARS

**முனைவர் ஆ. தேவதா,** உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
புனித சிலுவைத் தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 02
Email: thevathaa@gmail.com, ORCiD: https://orcid.org/0009-0000-5361-4848

**Dr. A. Devatha,** Assistant Professor, Department of Tamil Studies,
Holy Cross Autonomous College, Thiruchirappalli – 02

**Abstract:**

Bhakti is the great love for God. The Azhwars, who were well aware of the Karma Yoga, Jnana Yoga and Bhakti Yoga shown to attain God, chose the path of devotion from it. In that path of devotion, they especially adopted the path of surrender called Prabhakti and gave it to everyone. Although the Azhwars lived in different periods from the 5th to the 9th century AD, the consensus among them is clearly visible when you read their collection of works, Nalayira Divya Prabandham. The reason for that is that God himself expressed himself through their words, as they say. This world is God's farmland. God is the tiller. He sows the seed of devotion. God himself descends from his Paramapada and takes incarnations and comes to this world. Vaishnavites believe that God takes many incarnations to protect righteousness, destroy unrighteousness, and protect those who surrender to Him. The Puranas and Ithikas were revealed by sages and sages to tell the news and stories about those incarnations. The Azhwars largely use the ideas of these books in their songs. Every living being born in this world should live a life connected with the Supreme Lord; the Azhwars believed that the only goal of their life should be to please Him. Therefore, they showed a simple path of devotion to receive the grace of God, to obtain the joy of God, and to enjoy the life of the world in this world itself.

**Keywords**: Bakthi Ilakkiyam, Azhwars, Karma Yoga, Jnana Yoga, Bhakti Yoga

**ஆய்வுச் சுருக்கம்:**

இறைவன் மீது கொள்ளும் பேரன்பே பக்தியாகும். இறைவனை அடைவதற்காகக் காட்டப்பட்ட கர்மயோகம், ஞான யோகம், பக்தியோகம் இவைகளைப் பற்றி நன்கு அறிந்திருந்த ஆழ்வார்கள் அதில் பக்திநெறியைப் தேர்ந்து எடுத்தனர். அந்த பக்தி நெறியிலும், பிரபக்தி என்று கூறப்படும் சரணாகதி நெறியினைச் சிறப்பாகக் கொண்டு அனைவருக்கும் அதனை அளித்தனர். ஆழ்வார்கள் கி.பி.5 முதல் கி.பி. 9 ஆம் நூற்றாண்டு வரை வெவ்வேறு காலகட்டங்களில் வாழ்ந்தாலும் அவர்களது படைப்புத் தொகுப்பான நாலாயிர திவ்ய பிரபந்தத்தைப் படிக்கும்போது அவர்களுக்கிடையில் உள்ள கருத்தொற்றுமை நன்கு புலப்படும். அதற்குக் காரணம் இறைவனே விரும்பி அவர்கள் வாக்கின் வழித் தன்னை வெளிப்படுத்திக் கொண்டான் என்பர். இவ்வுலகம் இறைவனது விளைநிலம். இறைவன்தான் உழவன். பக்தி என்னும் விதையை அவன் விதைக்கிறான். இறைவனே தன் பரமபதத்திலிருந்து இறங்கி அவதாரங்கள் எடுத்து இவ்வுலகிற்கு வருகிறான். தர்மத்தைக் காக்கவும் அதர்மத்தை அழிக்கவும் தன்னைச் சரண் அடைந்தாரைக் காக்கவும் இறைவன் தானே விரும்பி பற்பல அவதாரங்கள் எடுக்கிறான் என்பது வைணவர் நம்பிக்கை. அந்த அவதாரங்கள் பற்றிய செய்திகளையும் கதைகள்ளையும் கூற புராணங்கள், இதிகாசங்கள் ஆகிய நூல்கள் ஞானிகளாலும், முனிவர்களாலும் அருளப்பட்டன. ஆழ்வார்கள் பெரிதும் இந்த நூல்களின் கருத்துக்களையே தம் பாடல்களில் கையாளுகின்றனர். இவ்வுலகில் பிறந்த ஒவ்வொரு ஜீவனும் பரமாத்வாகிய இறைவனுடன் தொடர்பு கொண்ட வாழ்வினைத்தான் வாழ வேண்டும். அவனது முகமலர்ச்சி ஒன்றே தம் வாழ்வின் குறிக்கோளாக இருக்க

வேண்டும் என்று ஆழ்வார்கள் கருதினர். எனவே இறை அருள் பெறவும், இறையின்பம் பெற்று மேலுலக வாழ்வினை இந்த பூவுலகிலேயே அனுபவித்து பேரின்பம் பெற்றிடவும் எளிய பக்தி வழியினைக் காட்டினர்.

**பிரதான சொற்பதங்கள்:** பக்தி இலக்கியம், ஆழ்வார்கள், கர்ம யோகம், ஞான யோகம், பக்தி யோகம்

**முன்னுரை:**

காலந்தோறும் மக்கள் சமுதாயம் மாறிக்கொண்டே இருக்கிறது. சமயங்கள் அதற்குக் காரணமாயின. ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு சமயம் மேலோங்கி இருந்தது. பக்தி இயக்கம் தோன்றிய காலத்தில் தமிழகத்தில் இறைவனைப் பற்றிய நம்பிக்கைகள் அற்ற புத்தம், சமணம் ஆகிய இருசமயங்களும் தம் செல்வாக்கினை இழக்கத் தொடங்கின. இக்காலத்தில் புத்துயிர் பெற்ற சைவம், வைணவம் இரண்டும் தத்தம் இறைவனையே அடிப்படையாகக் கொண்டன. சைவ சமயத்தை நாயன்மார்களும் வைணவ சமயத்தை ஆழ்வார்களும் மீட்டெடுத்து தழைத்தோங்க வைத்தனர். இச்சமயங்களை எளிய முறையில் மக்களுக்குரிய நெறியாகவும் அளித்தனர். தொன்மை மிக்க சமயங்களில் ஒன்றாகிய வைணவத்தைப் பக்திச் செழுமையும் தத்துவ வளமும் மிக்கதொரு சமயமாக ஆழ்வார்களும் ஆச்சாரியர்களும் ஆக்கித் தந்துள்ளனர். ஆழ்வார்களில் திருப்பாணாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார், பெரியாழ்வார்,ஆண்டாள் போன்றோரின் பக்தி நெறியை மட்டும் இக்கட்டுரை ஆராய முற்படுகிறது.

**சமயம்**

மனித சமூக வரலாற்றில் சமயம் என்பது மனிதனை நேர் வழிப்படுத்தி வாழச் செய்வதற்கான ஒருமார்க்கமாகத் திகழ்ந்திருப்பது அனைவரும் அறிந்த உண்மையாகும். ஆரம்ப காலம் தொட்டு, சமயக் கோட்பாடுகளின் தோற்றம், மாற்றம் ஆகிய கருத்துக்களை அனைத்தும் மனிதவாழ்வின் மேம்பாடு என்ற ஒரே கருத்தை அடித்தளமாகக் கொண்டு ஆக்கப்பட்டுள்ளது. மக்கள் அச்சுறுத்தும் தீமையினின்று தம்மைக் காப்பாற்றிக் கொள்ளவும் விரும்பியதைப் பெறவும் மனிதனுக்கும் மேலான ஒரு சக்தியை ஆற்றலைக் கண்டுபிடித்தனர். வாழ்க்கை நெறிமுறைகளுக்கு இசைந்தவாறு அமைய வேண்டும் என்ற நிலையில் தோன்றியதே சமயமாகும். அச்சமயங்கள் பலவாகவும் அவை சுட்டும் கடவுளர்கள் பலராகவும் உள்ளனர்.

“மேனாட்டு மொழிகளில் சமயம் என்பதற்கு நேராக வழங்கும் ‘ரிலிஜன்’ என்ற சொல் இரு பொருளில் வழங்கப் பெறுகிறது. ஒன்று குறி சொல்வது. அதாவது இறைவன் திருவுள்ளத்தை அறிவதற்குச் சில நிகழ்ச்சிகளையும் காட்சிகளையும் அடையாளமாகக் கொள்வது என்பது பொருள். மற்றொன்று இறைவனோடு ஒன்றுபடுத்துவது அல்லது மீண்டும் பிணைப்பது என்பதாகும். நெறி அல்லது வழி என்ற பொருளிலும் பல சமயங்கள் கருதப்பட்டு வந்துள்ளன. தமிழ் நூல்களிலும் திருநெறி செந்நெறி என்ற ஆட்சிகள் உண்டு. பொதுவாகப் பார்க்கும்போது சமயம் என்பது மனிதனுக்கும் மனித நிலைக்கும் மேற்பட்டதாக உள்ள ஆற்றல் அல்லது ஆற்றல்களுக்கும் உள்ள தொடர்பு பற்றியதாக எண்ணப்படுகிறது”1 .என்று கலைக்களஞ்சியம் கூறுகிறது.

திருமாலை முழுமுதற் பொருளாகக் கொண்ட சமயம் வைணவம் ஆகும். வடவர் திருமாலை ‘விஷ்ணு’ என்பர். இதனடியாகப் பிறந்த பெயராகிய ‘வைஷ்ணவம் என்பதே தமிழில் வைணவம் எனப்படுகிறது. சரணாகதி தத்துவம் எனப்படும் உயர்ந்த இலட்சியத்தைக் குறிக்கோளாகக் கொண்டதாகும். வைணவ சித்தாந்தத்தின் ஆழமான கருத்துக்களில் தூய்மையான பக்தியும் சாதி, சமய வேறுபாடற்ற தன்மையும் மிகச் சிறந்தவையாகும். இன்று உலக மக்களிடையே பல விதமான மதநம்பிக்கைகள் காணப்படுகின்றன. இதில் வைணவ சமயத்தின் நம்பிக்கை தனித்தன்மை பெற்று மிளிர்கிறது எனலாம். எவனொருவன் தன்னை திருமாலிடத்து அடிமை என்று நினைக்கிறானோ அவனே வைணவனாவான். இக்கருத்துக்கு இயைந்தவர்கள் எக்குலத்தவராய் இருந்தாலும் அவர்கள் வைணவர்களேயாவர்.

“வைணவ மதத்தின் தத்துவங்களை உலகிற்கு உபதேசித்து எங்கும் பரவச் செய்து அதனை வளர்த்த பெரியோர்களை ஆழ்வார்கள் என்றும் ஆச்சாரியர்கள் என்றும் வழங்குவர்”2

வைணவ ஆலயங்களில் கோபுரம், கொடிமரம், பிரகாரம், விமானம், மண்டபங்கள்; முதலியன அமைக்கப்பட்டிருக்கின்றன. விஷ்ணு ஆலயங்களில் வைணவ சமய மூர்த்திகளும் அவதாரங்களும் சிறப்பாக நிறுவப்பட்டுள்ளன. மூலஸ்தான மூர்த்தி நாராயணரேயாவார்.

மக்கள் அன்றாட வாழ்க்கையில் ஒழுங்குபெற நடத்துவதற்கு அமைத்துக் கொண்ட நன்னெறிகளின் தொகுதியே சமயம் என வழங்கப் பெறுவதாகக் கொள்ளலாம். உலகில் பல சமயங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு சமயத்திலும் பல பிரிவுகள் கிளைத்திருக்கின்றன. ஆனால் எல்லாச் சமயங்களுக்கிடையே வெறுப்புணர்ச்சியும், காழ்ப்புணர்ச்சியும் தோன்றி வளர்ந்தன. எல்லா நாடுகளிலும் இச்சூழல் இருந்தது இன்றும் இருக்கிறது.இச்சூழலில் வைணவ ஆழ்வார்களின் பக்தி நெறி ஈடு இணையற்றதாகச் சிறப்பிடம் பெறுகிறது.

**திருப்பாணாழ்வார்**

பாணர் குலத்தவராகிய இவர் உறையூரில் பிறந்து திருமாலை வழிபட்டார். தாம் தீண்டப்படாதவர் என்பதால் காவிரியின் தென்கரையில் இருந்தே வழிபட்ட இவரை நாள்தோறும் காவிரியிலிருந்து நீர் கொணரும் அர்ச்சகரது கனவில் தோன்றித் தோளில் சுமந்து வருமாறு திருமால் பணித்தார். அவரும் அவ்வண்ணமே செய்ய ஆழ்வார் அரங்கனின் அழகைக் கண்ணாரக் கண்டு போற்றினார். இவரது காலம் கி.பி.8 ஆம். நூற்றாண்டு .தொண்டரடிப்பொடியாழ்வார் பாடல்களில்

“பழுதிலா ஒழுகலாற்றுப் பல சதுப்பேதிமார்கள்
இழிகுலத்தவர்களேனும் எம் அடியார்களாகில்
வழிபட அருளினாய்”3 என்றும்
“ சாதி அந்தணர்களேனும் நுமர்களைப் பழிப்பராகில்
------------ அவர்கள் தாம்புலையர் போலும்”

என்றும் அமைந்த பாசுரப் பகுதிகள் திருப்பாணாழ்வார் வரலாற்றையே சுட்டிக்காட்டும் முறையில் இருந்ததால் தொண்டரடிப்பொடியாழ்வார் காலமாகிய கி.பி. எட்டாம் நூற்றாண்டே திருப்பாணாழ்வார் காலமாகும் என்ற கருத்தும் இங்கே கருதத்தக்கது.

இறைவனின் தாமரை போன்ற திருப்பாதத்தை விளக்கிய திருப்பாணாழ்வார், பாதத்திற்கு அடுத்தபடியாகக் கண்ணின் அழகினைப் போற்றுகிறார்.

இரணியனுடைய உடலைக் கிழித்தவனும், பிரமன் முதலிய தேவர்களாலும் அணுக முடியாதவனும், ஆதிகாரணனும் உபகாரியும் திருவரங்கத்துள் எழுந்தருளியிருக்கிறவனுமாகிய எம்பெருமானுடைய திருமுக மண்டலத்தில் கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து, செவ்வரி ஓடிய நீண்ட பெரிய கண்கள் என்னைப் பேதமை செய்தன என்று கூறுகிறார்.

“கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரிஓடி நீண்டஅப்
பெரியவாய கண்கள் என்னைப் பேதமை செய்தனவே” இறைவனின் பாதம், கண் என்ற ஒவ்வொரு நிலையை விளக்கிய ஆழ்வார், எம்பெருமான் உலகத்தைக் காத்தல் செய்தியைத் தன்னுடைய பாசுரத்தில் ஓர் இடத்தில் மட்டும் கையாண்டுள்ளார்.

பெரிய ஆலமரத்தின் சிறிய இலையில் ஒரு பாலகனாகி உலகம் முழுவதும் உண்டு திருவரங்கத்தில் அரவணையில் பள்ளி கொண்டிருக்கும் எம்பெருமானுடைடய அழகிய சிறந்த மணி ஆரமும், முத்துவடமும் போன்ற பல ஆபரணங்கள் நிறைந்த ஒப்பற்ற அழகுடைய நீலமேனியானது என்னுடைய உள்ளத்தைக் கொள்ளை கொண்டு போயிற்று. இதற்கு நான் என் செய்வேன் என்று குறிப்பிடும் போது

“ஆலமா மரத்தின் இலைமேல் ஒரு பாலகனாய்
ஞாலம் ஏழும் உண்டான அரங்கத்தின் அரவின் அணையாம்”

என்று குறிப்பிடுகிறார். ஒவ்வொரு பாசுரத்திலும் இறைவனின் அழகில் மயங்கிய இவர் தன் இறுதிப்பாசுரத்தில் உன்னைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாது என்று குறிப்பிடுகிறார்.

“ கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய்
உண்ட வாயனென் உள்ளம் கவர்ந்தானை
அண்டர்கோன் அணிவரங்கன் என் அமுதினைக்
கண்ட கண்கள் மற்று ஒன்றினைக் காணாவே”

உள்ளத்தில் இறைச்சிந்தனையை தவிர வேறுசிந்தனை இல்லாமல் இறைவனிடத்துத் தன்னை முழுவதும் ஒப்படைத்தவர் இவரே.சாதி, சமயம், மொழி , இனம், ஆகிய அனைத்திற்கும் பாதாதிகேச வருணனையில் மிகவும் ஈடுபட்டு தன்னுடைய இறுதிப்பாசுரம் பாடும்போதே இறைவனிடத்து ஐக்கியமானவர் என்று புராணங்கள் தெரிவிக்கின்றது.

**தொண்டரடிப்பொடியாழ்வார்**

விப்பிரநாராயணர் என்னும் இயற்பெயர் கொண்டவர். சோழநாட்டில் காவிரியின் தென்கரையில் உள்ள பூதங்குடி என்னும் வைணவத் தலத்திற்கு அண்மையில் உள்ள திருமண்டங்குடியில் பிறந்தவர் .

இவரைத் திருமாலின் வைஜயத்தீ என்னும் வனமாலையின் அம்சமாகக் கொள்வர். வைணவப் பெருமக்கள் திருப்பாணாழ்வாரைப் போலத் திருவரங்கன் மீது கொண்ட காதலால் திருவரங்கம் சேர்ந்து பெரியாழ்வாரைப் போல நந்தவனம் ஒன்று அமைத்துப் பெரிய பெருமாளுக்குப் பூமாலை தொடுத்துக் கொடுக்கும் பணியில் ஈடுபட்டவர்.

"திருமாலை அறியாதார் திருமாலை அறியாதாரே"

என்ற வைணவச் சான்றோர்களது கூற்றே திருமாலை என்னும் இவரது பிரபந்தத்தின் பெருமையைப் தெரிவிக்கும். 45 பாசுரங்களும் பக்தர்களைப் பகவானோடு இணைத்து வைக்கும் அன்பு தவழும் அற்புதச்சங்கிலி எனலாம். இதற்கு பெரியவாச்சான் கொடுத்துள்ள விரிவுரை மேலும் இப்பிரபந்தத்துள் பக்தர்களை ஈடுபடச் செய்யும்.

"குடதிசை முடியை வைத்துக் குணதிசை பாதம் நீட்டி
வடதிசைப் பின்பு காட்டித் தென்திசை இலங்கை நோக்கி
கடல்நிறக் கடவுள் எந்த அரவணைத் துயிலும் ஆ கண்டு
உடல்எனக்கு உருகுமாலோ என்செய்வேன் உலகத்தீரே"

என்ற பாசுரம் ஆழ்வாரின் பக்தி உணர்வை வெளிப்படுத்துகிறது.

தொண்டரடிப்பொடியாழ்வார் திருவரங்கத்திலே பலகாலம் வாழ்ந்தவர். திருவரங்கனுக்கு மலர்த்தொண்டு புரிந்தவர். ஆண்டாள் நாச்சியாரைப் போன்று திருவரங்கன் மீது அளவில்லாத காதல் கொண்டவர். எம்பெருமானைக் காட்டிலும் எம்பெருமானுடைய திருநாமம் உயர்ந்தது என்கிற கொள்கைக்கேற்ப திருநாமத்தினுடைய பெருமையைப் போற்றுகின்றார்.

"பச்சைமா மலைபோல்மேனி! பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா! அமரரேறே! ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திரக்லோக மாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே" (திருமாலை -2)

என்று ஆழ்வார் அரங்கநாதனின் பெருமையினைத் தன் நாவினால் சொல்லுவதனால் நீங்கிப் பரமபதத்திற்குச் சென்று அந்த பரமபதத்தை ஆளுகின்ற அந்த அனுபவ ருசியை அடைவதாயிருந்தாலும் அதனை விரும்பமாட்டேன் என்று கூறினார்.

காவிரி நதியின் நடுவே அமைந்த அரங்கநாதன் சயனித்திருப்பதாகிய ஒப்பற்ற சயனத் திருக்கோலத்தைப் பற்றித் திருமாலை எடுத்துரைக்கின்றது.

"கங்கையில் புனிதமாய் காவிரி நடுவுபாட்டு
பொங்குநீர் பரந்துபாயும் பூம்பொழில் அரங்கந்தன்னுள்
எங்கள் மாலிறைவனீசன் கிடந்ததோர் கிடக்கை கண்டும்;
எங்ஙனம் மறந்து வாழ்கேன்? ஏழையேன் ஏழையேனே! (திருமாலை -23)

என்று திருவரங்கத்தைச் சிறப்பித்துப் பாடுகிறார் தொண்டரடிப் பொடியாழ்வார்.சகல சித்தத்தை உடைய நான் கங்கை நதியைக் காட்டிலும் பரிசுத்தயுடையதாகிற காவேரி நதியினது நடுவிடத்திலே பெரிய கிளர்த்தியோடு வருகின்ற அந்நதியின் நீர்ப்பெருக்கு எங்கும் பரவிப் பாய்வதற்கு இடமானதும் அழகிய சோலைகள்ளை உடையதுமாகிய கோயிலிலே அடியவரான எங்;களிடத்தில் பேரன்பு கொண்டவனுமாயிருக்கிறார்.

**பெரியாழ்வார்**

தென்பாண்டி நாட்டில் திருவில்லிப்புத்தூரில் சுவாதி நட்சத்திரத்தில் பிறந்தவர் பெரியாழ்வார். இவரின் இயற்பெயர் விஷ்ணுசித்தன். நந்தவனம் அமைத்து நாள்தோறும் திருமாலுக்குச் சூட்டித் தொண்டு புரிந்து வந்தார். கிருஷ்ண பரமாத்மாவிடம் பேரன்பு கொண்ட இவர் கண்ணனைக் குழந்தையாகவும் தம்மைத் தாயாகவும் கருதி அக்குழந்தையைத் தாலாட்டிச் சீராட்டி மகிழ்கின்றார். கண்ணனின் கால்விரல் முதலாக திருமுடிவரையுள்ள உறுப்புகளை அழகாக வருணித்துத் தாலாட்டுப் பாடல்கள் பாடியுள்ளார்.

"மாணிக்கம் கட்டி வயிரம் இடைகட்டி
ஆணிப் பொன்னாற் செய்த வண்ணச் சிறுதொட்டில்
பேணி உனக்குப் பிரமன் விடுத்தான்
மாணிக் குறளனே தாலேலோ
வையம் அளந்தானே தாலேலோ"

என்ற பாடல் தாய்மையுள்ளத்தைப் பலப்படுத்;துகின்றது.

**ஆண்டாள்**

பெரியாழ்வார் திருவில்லிப்புத்தூரில் துளசி செடி அருகில் கண்டெடுக்கப்பட்ட குழந்தை ஆண்டாள். ஆடித் திங்கள் பூரம் நட்சத்திரத்தில் பூமகள் அம்சமாய் தோன்றியவர். பெரியாழ்வார் இவருக்குச்

சூட்டிய பெயர் கோதை. தினந்தோறும் பெருமாளுக்குப் பெரியாழ்வார் தொடுக்கும் மாலையைத் தனது கூந்தலில் சூடி அழகு பார்த்த பின்னர் தான் இறைவனுக்குச் சூட்ட வைப்பாள். இறைவனையே ஆண்டதால் ஆண்டாள் என்றும், தான் சூடிய மாலையினை இறைவனுக்கு அணிவித்ததால் சூடிக்கொடுத்த சுடர்க்கொடி என்றும் போற்றப்பட்டார். இறைவனைக் காதலனாகவும் தன்னைக் காதலியாகவும் பாவித்துப் பாடிய பாடல்கள் நாச்சியார் திருமொழியும் திருப்பாவையும் ஆகும். அகச்சுவை ததும்ப இப்பாடல்கள் உள்ளன.

“மானிடவர்க் கென்று பேச்சுப் படில் வாழ்கில்லேன்”(நாச்சியார் திருமொழி-1.1)

என்ற உறுதிப்பாட்டுடன் வாழ்ந்தவள் . இறுதியில் திருவரங்கத்தே இறைவனோடு இணைந்தாள். ஆண்டாளின் பாடல்கள் காதல் கரை புரண்டோடும் வேகமும் விரைவும் உடையன.

திருமாலைத் தன் காதலனாக எண்ணும் கனவுக்காட்சி

“வாரண மாயிரம் சூழ வலம் செய்து
மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாமம் நிரை தாழ்ந்த பந்தர்கீழ்
மைத்துனன் நம்;பி மதுசூதனன் வந்தென்னைக்
கைத்தலம் பற்ற கனாக் கண்டேன்”( நாச்சியார் திருமொழி)

என்று தன் கனவினைக் கூறி மகிழ்கின்றாள்.

“ஓங்கி உலகலந்த உத்தமன் பேர்பாடி”(திருப்பாவை-3)

என்று போற்றியவள் ஆண்டாள் வேதமனைத்துக்கும் வித்து என்று போற்றுவர் ஆன்றோர்.

**முடிவுரை**

இறைவனின் திருநாமத்தைப் போற்றுவதே கொள்கையாகக் கொண்டவர்கள் ஆழ்வார்கள். இறை சிந்தனை தவிர வேறு சிந்தனை இல்லாதவர்கள். மக்களிடம் பக்தி உணர்வு ஏற்படுவதற்கு தூண்டுகோலாய் இருப்பவர்கள். ஆழ்வார்கள் திருமாலை குழந்தையாக காதலனாக உறவுகொண்டு பாராட்டும் போக்கு போற்றுதற்கு உரியது.

சான்றெண் விளக்கம்.

1.கலைக்களஞ்சியம் 4ஆம் தொகுதி –பக்451,452
2. கலைக்களஞ்சியம் 4ஆம் தொகுதி –பக்456,
3. இந்துமத இணைப்பு விளக்கம் -பக்-65

## References

1. Encyclopedia of Arts Volume 4 – Page 451,452
2. Encyclopedia of Arts Volume 4 – Page 456,
3. Hinduism Connection Explanation – Page-65

**License**

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.
Our journal adopts CC BY License Creative Commons Attribution 4.0 International License http://Creativecommons.org//license/by/4.0/ . It allows using, reusing, distributing and reproducing of the original work with proper citation.

Tamilmanam